பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

05 02 2025 **WEDNESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- தில்லி சட்டப்பேரவைத் தேர்தலில் காலை 11 மணி நிலவரப்படி 20 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.
- பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் மகா கும்பமேளாவில் பிரதமர் திரு நரேந்திர மோடி பங்கேற்று திரிவேணி சங்கமத்தில் இன்று புனித நீராடினார்.
- தமிழகத்தின் மிகப்பெரிய துறைமுகங்கள், 170-க்கும் மேற்பட்ட சர்வதேச துறைமுகங்களுடன் இணைப்பை கொண்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் தெரிவித்துள்ளார்.
- காஸா பகுதியை அமெரிக்கா தனது பொறுப்பில் எடுத்துக்கொண்டு அங்கு பொருளாதார ரீதியான மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ளும் என்று அந்நாட்டு அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.
- சிங்கப்பூர் **Smash** டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மனவ் தாக்கர் - மனுஷ் ஷா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*----- இனி விரிவான செய்திகள் ----*

**<<<<<<>>>>>>**

தில்லி சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. காலை 11 மணி நிலவரப்படி 20 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசுத் தலைவர் மாளிகை வளாகத்தில் உள்ள வாக்குச்சாவடியில் வாக்களித்தார்.

குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர், புதுதில்லியில் இன்று தமது வாக்கினை செலுத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்தியா உலகின் மிகப்பெரிய மற்றும் பழமையான ஜனநாயக நாடாக விளங்குகிறது என்று தெரிவித்தார்.

வாக்காளர்கள் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சஞ்ஜீவ் கன்னா, மத்திய அமைச்சர்கள் திரு ஜெய்சங்கர், திரு ஹர்தீப் சிங் பூரி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி, தில்லி துணைநிலை ஆளுநர் திரு வி கே சக்சேனா, தில்லி முதலமைச்சர் திருமதி அதிஷி மர்லேனா, தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார், தேர்தல் ஆணையர்கள் திரு ஞானேஸ்வர் குமார், திரு சுக்பீர் சிங் சாந்து உள்ளிட்டோர் தில்லியில் வாக்களித்தனர்.

இந்த ஜனநாயக திருவிழாவில் வாக்காளர்கள் முழு ஆர்வத்துடன் பங்கேற்று தங்களது மதிப்புமிக்க வாக்குகளை செலுத்துமாறு பிரதமர் திரு நரேந்திரமோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இன்று காலை புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய தலைமை தேர்தல் ஆணையர் திரு ராஜீவ்குமார், தில்லி சட்டப்பேரவைத் தேர்தல் அமைதியான முறையில் நடைபெற்றுவருவதாகவும், இப்பணியில் ஈடுபட்டுவரும் தேர்தல் அதிகாரிகள், பணியாளர்கள் அனைவருக்கும் தாம் பாராட்டுகளை தெரிவித்துக்கொள்வதாகவும் கூறினார்.

இதனிடையே, தமிழகத்தின் ஈரோடு கிழக்கு சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவும் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. காலை 11 மணி நிலவரப்படி 26 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - மூர்த்தி – 22 செகண்ட்ஸ்)*

உத்தரப்பிரதேச மாநிலம் மில்கிபூரில் நடைபெற்றுவரும் சட்டப்பேரவை இடைத்தேர்தலில், காலை 11 மணியளவில் 30 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இந்த தேர்தல்களில் பதிவாகும் வாக்குகள் வரும் எட்டாம் தேதி எண்ணப்படவுள்ளன.

**<<<<<<>>>>>>**

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்..

*(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)*

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் உலகின் மிகப்பெரிய ஆன்மீக திருவிழாவான மகா கும்பமேளாவில் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று பங்கேற்று திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வழிபாடு மேற்கொண்டார்.

முன்னதாக, பிரயாக்ராஜ் வந்த பிரதமரை உத்தரப்பிரதேச முதலமைச்சர் திரு யோகி ஆதித்யநாத் வரவேற்று படகில் அழைத்து சென்றார்.

திரிவேணி சங்கமத்தில் நடைபெறும் பூஜைகளில் பங்கேற்கும் பிரதமர், அதனைத்தொடர்ந்து, மகா கும்பமேளாவில் பங்கேற்றுள்ள சாதுக்கள் மற்றும் துறவிகளை சந்திக்கிறார்.

மகா கும்பமேளாவில் இன்று அதிகாலை முதல், காலை எட்டு மணிவரை 37 லட்சத்து 48 ஆயிரம் பேர் புனித நீராடியுள்ளனர்.

இதுவரை மொத்தம் 38 கோடியே 29 லட்சம் பேர் மகா கும்பமேளாவில் புனித நீராடியுள்ளதாக உத்தரப்பிரதேச அரசு தெரிவித்துள்ளது.

*(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)*

**<<<<<<>>>>>>**

ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழுவின் மூன்று நாள் கூட்டம் மும்பையில் இன்று தொடங்கியது.

ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சஞ்ஜய் மல்கோத்ரா தலைமையில் நடைபெறும் இந்த கூட்டத்தில் வட்டி விகித மாற்றங்கள் குறித்து விவாதிக்கப்படுகிறது.

திரு மல்கோத்ரா ரிசர்வ் வங்கி ஆளுநராக பதவியேற்ற பின் நடைபெறும் முதல் கூட்டம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

**<<<<<<>>>>>>**

நாட்டின் ஏற்றுமதி, இறக்குமதியை துரிதப்படுத்தும் வகையில் தமிழகத்தின் மிகப்பெரிய துறைமுகங்கள், 170-க்கும் மேற்பட்ட சர்வதேச துறைமுகங்களுடன் இணைப்பை கொண்டுள்ளதாக மத்திய கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு சர்பானந்த சோனாவால் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இதுதொடர்பான கேள்விக்கு எழுத்துப்பூர்வமாக பதிலளித்த அவர், மத்திய கிழக்கு நாடுகள், ஆஸ்திரேலியா, அமெரிக்கா, தென் அமெரிக்க நாடுகளுடன் கடல்வழி போக்குவரத்து மேம்படுத்தப்பட்டிருப்பதாக கூறியுள்ளார்.

சென்னை - **Vladivostok** கடல்வழித்தடம் ஒரு முக்கியமான சர்வதேச துறைமுக இணைப்பு பாதையாக அமைந்துள்ளது என்றும், அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

நடப்பு நிதியாண்டில் வங்கி மோசடி வழக்குகளின் எண்ணிக்கை 62 புள்ளி பூஜ்யம் எட்டு சதவீதம் குறைந்திருப்பதாக மத்திய நிதித்துறை இணையமைச்சர் திரு பங்கஜ் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இதுதொடர்பான கேள்விக்கு எழுத்துப்பூர்வமாக அவர் தெரிவித்த பதிலில், நடப்பு நிதியாண்டில் கடந்த டிசம்பர் மாதம் வரையிலான வழக்குகளின் எண்ணிக்கை, அதற்கு முந்தைய நிதியாண்டின் இதே காலக்கட்டத்துடன் ஒப்பிடுகையில், 62 புள்ளி பூஜ்யம் எட்டு சதவீதம் குறைந்திருப்பதாக கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் கோவை மாவட்டம் வால்பாறையில் காட்டு யானை தாக்கி வெளிநாட்டு சுற்றுலா பயணி ஒருவர் உயிரிழந்தார்.

வனத்துறையினரின் எச்சரிக்கையை மீறி, அந்த சுற்றுலா பயணி சாலையை கடக்க முயன்றதாலேயே இச்சம்பவம் நிகழ்ந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - ஹரிஹரன் - 40 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

கடந்த ஐந்தாண்டுகளில் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருட்கள் ஏற்றுமதி வளர்ச்சி ஆணையம் திருச்சி மாவட்டத்தில் எட்டு திறன் மேம்பாட்டு நிலையங்களையும், புதுக்கோட்டை மாவட்டத்தில் மூன்று திறன் மேம்பாட்டு நிலையங்களையும் அமைத்திருப்பதாக மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை இணையமைச்சர் திரு ஜிதின் பிரசாதா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்துப்பூர்வமாக அவர் அளித்த பதிலில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறிய 200-க்கும் மேற்பட்ட இந்தியர்களை அந்நாடு இந்தியாவிற்கு திருப்பி அனுப்பியுள்ளது.

இவர்கள் அனைவரும் அமெரிக்க விமானப்படையின் சி ஜே ஹெர்குலஸ் விமானத்தின்மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

இன்று பிற்பகல் இந்த விமானம் அமிர்தசரஸ் விமான நிலையத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

போரால் பாதிக்கப்பட்ட காஸா பகுதியை அமெரிக்கா தனது பொறுப்பில் எடுத்துக்கொள்ளும் என்றும், அதனை பொருளாதார ரீதியாக மேம்படுத்துவதற்கான பணிகளை மேற்கொள்ளும் என்றும் அந்நாட்டு அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

வெள்ளை மாளிகையில் இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாகுவை சந்தித்துப்பேசிய பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனை தெரிவித்தார்.

காஸா பகுதியில் வெடிக்காத நிலையில் உள்ள ஆபத்தான குண்டுகள், இதர ஆயுதங்களை அகற்றுவதற்கு அமெரிக்கா பொறுப்பேற்கும் என்றும் அவர் கூறினார்.

அந்த பகுதியில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தி, அங்கு வாழும் மக்களுக்கு வீட்டுவசதிகளையும், வேலைவாய்ப்பினையும் அமெரிக்கா உருவாக்கித்தரும் என்று திரு ட்ரம்ப் தெரிவித்தார்.

அமெரிக்க அதிபராக திரு டொனால்டு ட்ரம்ப் பதவியேற்ற பிறகு, அங்கு முதல் முறையாக வெளிநாட்டு தலைவர் என்ற முறையில் திரு பெஞ்சமின் நெத்தன்யாகு பயணம் மேற்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

சிங்கப்பூர் **Smash** டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மனவ் தாக்கர் - மனுஷ் ஷா இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 11-5, 11-8, 11-6 என்ற செட் கணக்கில், ஹாங்காங்கின் **‘Kwan To Yiu – Chun Ting Wong** இணையை வென்றது.

**<<<<<<>>>>>>**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியின் இன்றைய ஆட்டத்தில் மோகன் பெஹான் அணி – பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.
கொல்கத்தாவில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**<<<<<<>>>>>>**

தேசிய அளவில் இந்திய கைத்தறி தொழில்நுட்பக்கழக கல்வி நிறுவனங்களுக்கு இடையிலான விளையாட்டுப்போட்டிகள் சேலத்தில் இன்று தொடங்கியது.

**<<<<<<END>>>>>>**